**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC -93/2019**

**வழக்கு சாட்சி :PW5(LW7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | தொழில் | : | விவசாயம் |
| தந்தை பெயர் | : | வேலு | சமயம் | : | |
| கிராமம் | : | பெரியகுரும்பட்டி | வயது | : | 48 |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on** the **day 08th day of April 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 - Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது பெரியகுரும்பட்டியில் குடியிருந்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். மாதம் நினைவில் இல்லை. கடந்த 2018 ம் வருடம் 26 ம் தேதி காலை சுயம்பு அய்யனார், பாப்பாத்தி அம்மன், கருப்பசாமி கோவிலின் உண்டியல் உடைக்கப்பட்டது சம்மந்தமாக கேள்விப்பட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தேன். சம்பவம் எவ்வாறு நடந்தது என கேட்டார்கள் . நாங்கள் அனைவரும் கூறினோம். சம்பவத்தை பற்றி விசாரித்ததற்கு சாட்சியாக இருக்குமாறு போலிசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 /PW5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>( சாட்சியானவர் அரசு வழக்கை பகுதியளவு ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

கடந்த 24.06.2018 ம் தேதி காலை 07.30 மணிக்கு மேற்சொன்ன சம்பவ இடத்தில் நானும், தங்கராசுவும் அங்கு நின்று கொண்டிருந்த போது போலிசார் எங்கள்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தாக்ள் என்றால் சரிதான். அங்கு வைத்து பார்வை மகஜரில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான்

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

எங்கள் ஊர் முக்கியஸ்தர்களில் நானும் ஒரு நபர் என்றால் சரிதான். எங்கள் ஊரில் பொதுவாக ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் காவல் நிலையம் சென்று பேசி வருவோம் என்றால் சரிதான். நான் மேற்சொன்ன வாறு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. மேற்சொன்ன 26 ம் தேதியில் கையொப்பம் செய்ததை தவிர்த்து வேறு தேதியில் ஏதேனும் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை.